TAMIL NADU LEGISLATURE
6 NOV 1972
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1972 ஆகஸ்ட் 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Madras Museum

* 206 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Museum Review Committee constituted by the Centre has recommended during 1972 that the Madras Museum may be upgraded as National Museum; and

(*b*) if so, the action taken by the Government?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்திய அரசால் 1970-இல் நியமிக்கப்பட்ட அரும்பொருட்காட்சிச்சாலை மறு ஆய்வுக்குழு, சென்னையிலுள்ள அரும்பொருட்காட்சிச்சாலை தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டு அது தேசிய அரும்பொருட்காட்சி நிலைக்கு உயர்த்தப்படவேண்டும் என்ற பரிந்துரையைச் செய்துள்ளது. இந்திய அரசு மாநில அரசின் கருத்து அறிய அந்தப் பரிந்துரையை மாநில அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. அதுபற்றி மாநில அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : போதுமான கட்டடங்கள் கட்டாததனால் ரேர் ஸ்பீஸிகள் கொண்டுவந்து வைக்கப்படாத நிலை இருக்கிறது, முப்பது வருஷங்களுக்கு முன்பு இந்தியாவிலேயே மிக முக்கியமான மியூஸியமாக இருந்த இது இப்பொழுது கேட்பாரற்றுக் கிடைக்கிறது என்பது உண்மையா ? அப்படியானால் மத்திய அரசாங்கத்திடமிருந்து மானியம் வாங்கி அபிவிருத்தி செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள அரும்பொருட்காட்சிச் சாலை நல்ல நிலையில்தான் இருந்து வருகிறது. ஆனால், போதுமான அளவுக்கு இடம் இல்லை என்பது உண்மை

தான். பெரும்பாலான பொருள்கள் இன்னும் வைக்கப்படவேண்டிய நிலைமையில் இருந்து வருகிறது. இந்திய அரசினுடைய ஆய்வுக்குழுவினர் வந்து ஆராய்ந்து பார்த்து, இன்ன இன்ன வசதிகளெல்லாம் செய்யவேண்டும் என்ற கோரிக்கைகளை அனுப்பிவைத்திருக்கிறார்கள். அவை அந்த அரும்பொருட்காட்சிச் சாலை இயக்குநர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அவர்களிடமிருந்து அறிக்கை அரசுக்கு வந்தபிறகு அதன்மீது நடவடிக்கை எடுத்து இந்திய அரசினருக்கும் அனுப்பிவைக்கப்படும், இந்திய அரசிடமிருந்து அதற்காக மானியம் கோருகிற நிலையும் இருந்து வருகிறது.

திரு. ந. தருமலிங்கம் : தேசிய அரும்பொருட்காட்சிச்சாலையாக மாற்றுவதற்கு என்ன என்ன தகுதிகள் வேண்டும் என்று அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்குப் பல்வேறு காரணங்கள் வைத்திருக்கிறார்கள். அந்த அரும்பொருட்காட்சிச் சாலையைப் பார்க்க வருகின்ற பார்வையாளர்களுடைய எண்ணிக்கை எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்க்கிறார்கள். கல்வித்துறைக்கு எந்த அளவு அது பயன்படுகிறது என்றும் பார்க்கிறார்கள். திரட்டி வைக்கப்பட்டிருக்கிற பொருள்களில் தொன்மையான பொருள்கள், அருமையான பொருள்கள், வியப்பைத் தரக்கூடிய பொருள்கள் எவை என்று கணக்கிடுகிறார்கள். அதிலே பணியாற்றுகிறவர்கள் எந்த அளவு தேர்ச்சி பெற்று, திறமை பெற்றிருக்கிறார்கள். என்ற கணக்கும் எடுக்கிறார்கள். கட்டட வசதி, மற்ற வசதிகளையும் பார்க்கிறார்கள். அவர்களுடைய சர்வேயில் 'ப்ராப்பர் ஸ்டாண்டர்டு' உள்ள லைப்ரரியாக இருக்கிறதா என்று பார்த்து அந்த அடிப்படையில்தான் சென்னையில் இருக்கிற அரும்பொருட்காட்சிச்சாலையையும், பம்பாயில் இருக்கிற அரும் பொருட்காட்சிச் சாலையையும் தேசிய அரும்பொருட்காட்சிச் சாலைகளாக மாற்றியமைக்கலாம் என்று குழு பரிந்துரை செய்திருக்கிறது. அதன்பேரில் மத்திய அரசு, மாநில அரசின் கருத்தைக் கேட்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : கடந்த சில ஆண்டுகளாக இந்த அரும்பொருட்காட்சிச் சாலையில் அருமையான பொருள்களைச் சேர்க்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. பல பொருள்கள் சேகரிக்கப்பட்டும் வருகின்றன. ஆனால் பொருள்களை வைப்பதற்கான இட வசதியை எதிர்நோக்கியிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்படித் தேசிய மியூஸியம்கள் நாட்டில் எங்கெங்கு இருக்கின்றன ?—ஸப்ஸர் ஜங் மியூஸியம் இருக்கிறது—கல்கத்தா

1972 ஆகஸ்ட் 21]

வில் தேசிய மியூஸியம் இருக்கிறது—இவை மட்டும்தான் தேசிய மியூஸியங்கள் தானா? அப்படியானால், அம்மாதிரியாக சென்னையிலுள்ளதும் தேசிய மியூஸியமாக வருகிற நிலைமை ஏற்பட்டதற்குப் பின்னால் அதற்கு இன்னொரு பகுதியாக புதிய கட்டடங்கள் அமைப்பதற்கு ஏதாவது செயற்குறிப்பு அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மற்ற இடங்கள் தேசிய ம்யூஸியங்களாக இருக்கின்றனவா என்கிற விவரக் குறிப்பு இல்லை. ஆனால், இப்பொழுது சென்னையிலுள்ளதையும் பம்பாயிலுள்ளதையும் ஆக்கலாம் என்று குழுவினர் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்த வகையில் புதிய கட்டடங்கள் கட்டப்பட வேண்டியிருக்கிறது. அதற்கு நிதி உதவி கோரும் சூழ்நிலை இருக்கிறது. இந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு, அந்த அறிக்கையின் பேரில் மத்திய அரசிடமிருந்து மானியம் கோரலாம் என்ற எண்ணமும் மாநில அரசுக்கு இருந்து வருகிறது.

திரு. நா. வீராசாமி: தேசிய அரும்பொருட்காட்சிச் சாலையை மேம்படுத்துவதற்காகப் பார்க்க வருகின்றவர்களுடைய கணக்கும் எடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாணவர்கள் 'பிக்னிக்' வரும்போது பல இடங்களைப் பார்க்கிறார்கள். அப்படி வெளியூர்களிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளிலிருந்து வரும் மாணவர்கள் எல்லோரும் சென்னையிலிருக்கும் மியூஸியத்தை அவசியம் பார்க்க வேண்டும் என்ற உத்தரவை அரசாங்கம் பிறப்பித்தால், பார்க்க வருகிறவர்களின் எண்ணிக்கை உயரக்கூடும். அப்படி உத்தரவிட அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போதே சென்னைக்கு வருகிறவர்கள் பலரும் அரும்பொருட்காட்சியைப் பார்ப்பதை ஒரு பணியாக வைத்திருக்கிறார்கள். அந்த வகையில் வெளியூர்களிலிருந்து சென்னைக்குச் சுற்றுலா வருகின்ற மாணவர்கள் அரும்பொருட்காட்சிச் சாலைக்குச் சென்று வருகிறார்கள். இப்போதே அது ஒரு தேசிய அரும்பொருட்காட்சிச்சாலையாக மாற்றப்படுவதற்கு ஏற்ற அளவு பார்வையாளர்களின் எண்ணிக்கை இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு கணக்கு இருந்ததன் பேரில்தான் குழுவினர் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதனுடைய வசதிகளைப் பெருக்கவேண்டும் என்பதுதான் இப்பொழுது இருக்கிற குறைபாடு. அதை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மாநில அரசு எடுத்து வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி: புதிய புதிய மீன் வகைகள் அடிக்கடி கிடைத்துக் கொண்டிருப்பதால் அந்த மாதிரி ரேர் ஸ்பீஸி மீன் வகைகளை மியூயத்தில் ஏன் வைப்பதில்லை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அக்வேரியத்தில் வைக்கிருர்கள். ஏனென்ருல் இது பெரும்பாலும் பழம்பொருளைச் சேகரித்து வைக்கும் அரும்பொருட்காட்சிச் சாலையாக இருக்கிறது. அக்வேரியத்தில் அப்படிப்பட்ட புதிய மீன் வகைகளைச் சேகரித்து வைக்கிருர்கள்.

Municipal Schools

* 207 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the Government have any proposal or scheme to take over the schools run by the Municipalities in Tamil Nadu?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தாங்கள் நடத்தும் உயர் நிலைப் பள்ளிகளை அரசினரே ஏற்று நடத்த வேண்டும் அல்லது தனியார் பள்ளிகளுக்குத் தருவது போன்று தங்களுக்கு 100 சதவிகிதம் மானியம் தர வேண்டும் என்று இம்மாநிலத்தில் உள்ள நகராட்சிகள் கேட்டுக் கொண்டன. இக்கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு முதற்கட்டமாக மிகவும் நெருக்கடியான நிதி நிலையிலிருக்கும் நகராட்சிகள் நடத்தும் 10 உயர்நிலைப் பள்ளிகளை மட்டும் 1972-73-ம் ஆண்டு முதல் ஏற்றுக்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: ஒன்றுக்கு மேற்பட்ட உயர்நிலைப்பள்ளிகளைக்கூட சில நகராட்சிகள் நடத்தி வருகின்றன. எனவே, அந்த ஒன்றுக்கு மேற்பட்டவைகளை அரசாங்கம் எடுத்து மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் முதலில் குறிப்பிட்டது மாதிரி, நிதி நெருக்கடி மிக அதிகமாக இருக்கிற நகராட்சிகள் நடத்தும் உயர் நிலைப்பள்ளிகளில் பத்து இப்பொழுது தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. கல்வி இயக்குநர் 25 பள்ளிகளை எடுத்துக் கொள்ளலாம் என்று பரிந்துரை செய்திருக்கிருர். இந்த ஆண்டு பத்துப் பள்ளிகளை எடுத்துக்கொள்வது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. திருநெல்வேலி நகராட்சி 7 உயர்நிலைப்பள்ளிகளை நடத்தி வருகிறது. அவற்றிலே ஒரு பள்ளியை இந்த ஆண்டு அரசு எடுத்துக் கொள்வது என்று தீர்மானித்திருக்கிறது. குன்னூரில் ஒரு பள்ளியையும், குடியாத்தத்தில் ஒரு பள்ளியையும், இராமநாதபுரத்தில் ஒரு பள்ளியையும், திருவள்ளூரில் ஒரு பள்ளியையும், வாலாஜாபேட்டையில் ஒரு பள்ளியையும், இராசிபுரத்தில் ஒரு பள்ளியையும், மேட்டுப்பாளையத்தில் ஒரு பள்ளியையும், சிவகாசியில் ஒரு பள்ளியையும், அருப்புக்கோட்டையில் ஒரு பள்ளியையும் ஆக, பத்து உயர்நிலைப் பள்ளிகளை இந்த ஆண்டு எடுத்துக்கொள்வது என்று அரசு திட்டமிட்டிருக்கிறது.